உ

சிவமயம்



RUTNAM LIBRARY
EVELYN
36/11

தெல்லிப்பழை

புவிராஜசிங்க குலசேகரமுதலி வழிவந்தவரும்

மானிப்பாய்ப் பதியின் மகானுபாவருமாகிய

## சமூகஜோதி சி. தியாகராசா

அவர்களின் மகளும்

மேற்படி புவிராஜசிங்க குலசேகரமுதலி வழிவந்த

## திரு. வாமதேவன் அவர்களின்

மனைவியுமாகிய

## ஜெகதீஸ்வரி அவர்கள்

காலஞ்சென்றமை குறித்த

# நினைவுமலர்

✲

1983

அமரரான



ஜெகதீஸ்வரி வாமதேவன்

தோற்றம் : 10-9-1922

மறைவு : 13-5 83

உ

சிவமயம்



தெல்லிப்பழை

புவிராஜசிங்க குலசேகரமுதலி வழிவந்தவரும்

மாவிப்பாய்ப் பதியின் மகானுபாவருமாகிய

# சமூகஜோதி சி. தியாகராசா

அவர்களின் மகளும்

மேற்படி புவிராஜசிங்க குலசேகரமுதலி வழிவந்த

# திரு. வாமதேவன் அவர்களின்

மனைவியுமாகிய

# ஜெகதீஸ்வரி அவர்கள்

காலஞ்சென்றமை குறித்த

# வெளியீடு.

✻

ஆக்கம் :

க. ச. கந்தசாமி

( குமுந்தைக் கவிஞர் )

உ

# திருமதி ஜெகதீஸ்வரி வாமதேவன்

அவர்கள்

இறைபதம் இணைந்த

# நினைவு மலர்

*

வெண்பா

சாந்திதரு நந்தரோற்காரி ஆனமதி சித்திரையில்
பூர்வபக்கப் பிரதமையாம் நற்றிதியில் --- ஆண்டவனின்
பொற்பாதம் பற்றினரே ஜெகதீஸ்வரி மாதா
நற்பரனின் நல்லருள் நேர்வாழும்.

அகவற்பா

இந்து என்னுமோர் இனிய வாசகம்
சிந்தையிற் கனிவாகி வளர்ந்திட
இந்துவின் இளம் பிறையினைச் சூடிய
எம்தம் ஈசனார் சிந்தையாகவே
இந்து மக்கள் இந்து மாமதம்
இந்து மாநதி இந்து மாகடல்
இந்துவின் இனிய தண்ணொளியின்கீழ்
சந்ததம் ஒளிரும் விந்தை நாடுகள்
இந்தியத் தாயொடு இலங்கைச் சேயுமாய்
இந்து மாகடல் புந்தியில் வளர்ந்து
செந்தாமரை யெனச் சிறப்பது காணீர்
எம்தம் இலங்கா தேவியின் சிரமென
இலங்கிடும் ஏழிசை யாழ்வள நாட்டின்
மரகதத்திலக மாண்புறு பதியாம்
மானிப் பாயின் மதிஒளிப் பிழம்பாய்
உதித்தவர் உயர்திரு சமூக ஜோதி
இராச வாசிக் முதலியார் எனும் பெருந்தகை

மானிப்பாய் கிராமசபையின் மதிப்புறு தலைவர்
மானிப்பாய் இந்துக் கல்லூரி அமைப்பின்
உறுப்பினர் மத்தியில் உயர்வுறு உறுப்பினர்
மேலைநாட்டின் பொருள்வளம் தேக்கி
இலங்கை நாட்டில் இணையிலா வர்த்தகம்
பாங்குறச்செய்த வர்த்தகப் பிரமுகர்
தியாகராசா வள்ளலார் தெல்லியூர்
புவிராச சிங்க குலசேகர முதலி
வம்ச வழிவழிப் பெருமக னவார்
பக்கமெலாம் பசும் புற்றரைச் சோலை
தெங்குயிர்த் திலங்கும் கொக்குவிற் பதியின்
சற்குணர் டாக்டர் எஸ், சின்னத்தம்பியின்
பொற்புடைப் புதல்வி இந்திராணியை
சொற்பதம் பொருட்பதம் நற்பதம் சிறக்க
பொற்புடை மனையாய்க் கொண்டவர் இவரே.
தியாக ராஜ இந்து ராணியின்
இல்லறம் கனிந்த இனிய நற்செல்வி
ஜெகதீஸ்வரி இளம் தமிழமுதாய்
இனிது வந்துதித்தனர் இப்புவி முகத்தில்
பத்தொன்பது இருபத் திரண்டு
பற்றிய தேதி புத்திரி யானார்
ஒன்று அறு எண்பலம் பெற்ற
முன்னணி வண்ணக் கலைமக ளானார்
இலங்கைத் தலைநகர் கொழும்பினில் பிறந்தவர்
அங்கேயே சான்ஸ் பள்ளியில் பயின்றார்
இலங்கைத் தமிழர் தலைவர் இராம
நாதனியற்றிய கல்லூரி சேர்ந்து
இயல் இசைக்கலைகள் இனிதுறக் கற்றார்
இசைக்கலை சிறந்த குயிலே யானார்
இசையின் வசமாய் வளர்ந்த போட்டிகள்
பலப்பல பரிசுகள் பெற்று மகிழ்ந்தார்
பருவமும் உருவமும் பரிமளிப் பாக
திருமணத் திருமுக மங்கையு மானார்
பெற்றோர் சுற்றம் தேர்க் கூடி

வாழ்வும் வளமும் வகையாய்த் தேர்ந்து
புவிராய சிங்க குலசேகர முதலி
வர்சவழித் தோன்றல் நாகமுத்து இராசாமி சேதுப்பின்
சிரேஷ்ட மைந்தன் வாம தேவனை
ஏற்ற வரனென இனிதுற இணைத்தனர்
வாம தேவனை வடிவுற வரித்துக்
குங்குமம் பெற்ற கோதையு மானார்
தோன்றிய நாளே புகழொடு தோன்றிய
வாம தேவனின் வளர்நிலை காணீர்
மாவிப்பாய் இந்துவின் ஆரம்பக் கல்வி
கொழும்பு அனந்தா உயர்கல்வி ஆனது
பட்டப் படிப்பின் கெட்டித் தனங்கள்
சர்வகலாசாலைச் சான்றினைத் தந்தது
இறைபணி யாற்றும் திறைமதி ஒளிர
எழுத் தறிவிக்கும் இறைவர் ஆனார்
ஹற்றன் ஜோன்பொஸ்கோ கல்லூரி தன்னில்
வள்ளலார் கல்வி வழங்குந ரானார்
கல்லூரி அதிபர் பதவியும் வகித்து
ஆசிரிய சங்கம் அமைத்தும் சிறந்தார்
இந்துவின் இனிய சிந்தையின் கனிவாய்
இந்துமகா சபைத் தலைவரு மானார்
உலகெலாம் சென்று இந்துவின் தவத்தை
உயர்த்திய விவேகானந்த முனிவர்
இந்தியா வந்ததும் இந்திய ரெல்லாம்
பந்தாடும் வல்லபம் பெறவேண்டும் என்றார்
அந்த அருந்தவ முனிவரின் வாக்கை
எந்தம் வாம தேவனார் கொண்டார்
உதைபந் தாட்டம் கரப்பந் தாட்டம்
வரைவிலக்கணமாய் வகுத்து வாழ்வளித்தார்.
பத்தே ஆண்டில் பரவிய பணியில்
ஹற்றன் நகரத் தலைவரு மானார்
வாமதேவன் உடன் பிறப்பணியில்
அன்னை ரத்தினம் அன்புச் சகோதரி
அவ்வவர் துணைவர் அருங்கலை உணர்ந்த

கனக ரத்தினப் பேரரு ளாளன்
கவினுறு தவமலர் திருமகளாகி
தம்பி ராசாவின் துணைவியு மானூர்
பாட்லீஸ் அன்கோ பண்புறு தலைவர்
ஈஸ்வரநாதன் வ மணின் சோதரர்
மற்றொரு சோதரர் மகாதேவனும்
விமான லிமிடெட் நிர்வாகஸ்தர்
ஒன்றுக்கொன்று ஒப்புட னிணைந்த
உயர்தரப் பதவிகள் ஒன்றிய சோதரர்
பிறந்த குலமும் புகுந்த குலமும்
துலங்கும் வகையில் துலங்கி வாழ்பவர்
எந்தம் தமிழர் எங்கு சென்றாலும்
பந்தம் பாசம் பாங்குறப் பிணைத்து
சென்ற இடங்களைச் சிறப்புறச் செய்க
செம்மைச் சரித்திரத் தலைவரு மானூர்
சமூகசேவைச் சிறப்பினி லுயர்ந்த
சமாதான நீதவானு மாகினூர்
விவேகானந்தப் பெயர் துலங்கிடவே
மானிப்பாயில் பள்ளி கண்டவர் தாயார்
இத்தாலும் சிறந்த இனிய பர்த்தாவை
கற்றவின் கண்ணையக் காப்பதிற் தேர்ந்து
ஆறெறி பெண்ணும் சேர்ந்தினி தாற்றும்
சேவையின் சிறப்பை வானுற வுயர்த்தி
அகமும் ஆகமும் மகிழ்வுற மலர்த்தி
மகவு போலாகவும் வாழ்ந்தநற் தாயார்
ஜெகதீஸ்வரியார் இயற்றிய இல்லறம்
வகைவகையாக வரி வரி பெருகும்
பொற்பதம் பதிந்த புனித சுற்றம்
அயற்குலம் அமைந்த சிறப்பினைப் பாரீர்
ஸ்ரீஇராம நாதன் ஜே. பி. யு. எம்.
இலங்கைச் சட்டத் தரணிகள் தலைவன்
இராசேந்திரம் மகள் இராசலட்சுமி
இனியநன் மனையாய் இல்லறம் கனிய
சிவ குமாரன் சூரிய குமாரன்

இருதிரு குமாரர்களாக மலர்ந்தனர்
மகாராசாவின் மகள் சரளாவை
மணமக ளாகச் சிவகுமார் பெற்றார்
தமிழர் தம் பெருமை உலகெலாம் பரக்க
இராமநாதன் கிட்னி சேர்ந்து
சட்டக் கல்லூரி விரிவுரை இயற்றி
மட்டற்ற புகழைக் குவிப்பது காணீர்
புவனேஸ்வரி எனும் புனித சகோதரி
மணந்தவர் நடேசன் எம். பி. இ. ஜே. பி. ஆகும்
தலைநகர் கொழும்பில் பார்ணஸ் பிளேசில்
நிலைகொள மனையாம் பெற்றுதல் காணீர்
புவனேஸ்வரியின் பிள்ளைகள் தாமே
ஜெகதீஸ்வரிக்கு மக்களு மாவார்.
ராசநாதன் இருக்குமா ரோடு
கமலா ரேணுகா அருகினி லிருக்க
அம்மா வென்ற வார்த்தையில் பெரிய
அம்மா வாக வளர்த்தவர் காணீர்
தானும் வீட்டில் தளர்நடை காண
தேவ குமாரைத் தேடி வளர்த்தார்
கமலா லோக நாதனை மணந்தார்
ரேணுகா சண்முக நாதனை மணந்தார்
கிருஷ்ணு சுபாஷினி கமலா பெற்ற
பேரப் பிள்ளைகளாக மகிழ்ந்தார்
சுபாஷினி என்ற சொல்லின் சுகத்தில்
சகலமும் அடங்கிய அமைதியும் கண்டார்
சுபாஷினி சுபாஷினி என்றே அழைத்து
உபாஷினை யோடுயிர் பிரிந்ததோர் வரமே
பிள்ளைகள் பேரப் பிள்ளைகள் சுற்றம்
மற்றும் யாவரும் கதறிக் கலங்கவும்
எல்லோர்க்கும் இனிதாம் இறைபதம் என்று
இருப்பதை எல்லோருக்கும் இறப்பினில் காட்டி
எம்மைப் பிரிந்த எம்தாயே நின்
ஆத்மா சாந்தி சாந்தி பெறுகவே.

## கணவர் வாமன

பொட்டுக்கும் பூவுக்கும் புனிதம் கண்டீர்
பொட்டிட்டுக் கட்டிவிட்டேன் தாலி தன்னை
தொட்டுதிர்த்த கண்ணீரும் காயவில்லை
தொட்டிழுக்கக் காலனுக்குக் கைதா னுண்டோ

பின்தூங்கி முன்னெழுந்து குயிலாய்க் கூவும்
உன்இனிய குரலினை நான் கேட்பதெப்போ
உனைப் பிரிந்தே உயிர்நிலைக்கும் வகைதான் எது
உத்தமியே சித்தமிசைந் தீசனடி சேர்ந்திட்டீரே.

## சகோதரி புவனா

ராஜனையும் என்னிடம் தா என்பாய் அக்கா
குமாரனையும் கொஞ்சிவிட் நடேசர் தந்தார்
கமலாவைக் கருத்தினிலே பதிய வைத்து
ரேணுவையும் மார்பணைத்துக் காத்தாய் அக்கா.

பூமாதா தன்பலத்தால் வாழ்வோம் என்று
ஜெகதீஸ்சாய் புவனேஞ்சாய் பேரிட்டார்கள்
பூமாதா பொறைதாங்கி வளர்ந்த உண்மை
பூமாதா தன் அகமாய் சேர்த்திட் டாளோ.

## கிருஷ்ணா. சுபாஷினி

சுபாஷினி என் சுபாஷினி என்றழைத்தீர் பாட்டி
உபாசனையில் உணர்ச்சி எல்லாம் உமக்கே தந்தோம்
சாதனையில் கிருஷ்ணாவும் நானும் உம்தம்
நிலாவாகி நீண்டபணி புரிவோம் பாட்டி.

பேத்தி என்ற பேருக்க ஏற்றாற்போல
சேர்த்திருந்து சிந்தனையின் கருவூலங்கள்
வார்த்தெடுத்து வளமான வாழ்வு வாழ்வோம்
பார்த்திருந்து ஆசிதரும் ஆன்மவானீர்

### தங்கை மக்கள்

அம்மாவாய் அன்புயர்ந்த பெரியம்மாவாய்
இன்சொல்லால் எமையெல்லாம் இழுத்தணைத்து
என்பூடு இழைந்தோடும் முத்தம் ஈந்தீர்
இனிநாமும் மலர்ந்தமுகம் காண்பதெப்போ.

### அண்ணன் மக்கள்

மாமியென்று மருட்டி மொழி மெருகுஏற்றி
மாணிப்பாய் தந்தபெரும் மேதைஎன்றோம்
மாமி எங்கள் மாமாவாம் தேவருக்கே
மாதாவு மாயிருந்து காப்பதெப்போ.

### அண்ணன் இராமநாதன்

சட்டத்தில் விண்ணன் என்று தெருட்டி
கிட்டிவந்து கட்டிமுத்தம் இட்ட தங்காய்
எட்டிவிட்டீர் எங்கள் அணிநிரையைவிட்டு
கிட்டிவிட்டீர் இறைவனடி வாழ்வீரம்மா.

லோகுவொடு சண்முகமுடன் சேர்ந்துநிற்க
வாமரது சோதரமும் தேம்பி நிற்க
கொடிபோலத் துவளுகிறாள் இராசலட்சுமி
அடிசாய்ந்த மரமானேன் அன்புத் தங்காய்.

### தேற்றம்

விந்தைசேர் உலகில் யாண்டும்
விஞ்ஞான விந்தை கண்டோம்
விந்தை இவ்வாக்கைத் தன்னை
விந்தையாய் இயக்கும் சக்தி
விந்தையாய் உயிரைப் போக்கும்
விந்தையின் இயக்குனன் யார்
அந்த ஓர் இறையின் தாளில்
இணைந்ததை வாழ்த்து வோமே.

இந்த மண்ணுலகில் என்றும்
　　பிறந்தவர் இறப்ப துண்மை
வாழ்ந் துளவான பாசம்
　　வதைப்பதும் உண்மை அம்மா
எந்தையே ஈசா வென்று
　　சிந்தையில் கனிவு தேக்கி
வந்தனை புரிந்து தான
　　தருமங்கள் ஓங்கச் செய்வோம்.

வேறு

முழுமதியின் குளிர்நிலவாய் இனிய உள்ளம்
　　தீஞ்சுவையாய்த் தேனூறும் கனிவுவார்த்தை
எண்ணத்தில் எழுத்துருவில் தமிழின் தேவை
　　எந்தும் இருகைத்தலங்கள் குவியநின்று
மண்ணகத்தில் மலர்ந்ததெலாம் தொண்டுக்கென்றே
　　மனநிலையைச் சீர்படுத்தி வாழும்போது
எந்த ஒருஉயிர்க்குமிடர் நேரா வண்ணம்
　　வந்தனையில் வாழுகின்ற உலகு காண்போம்.

கடம்.

வணக்கம்.

# தோத்திரப் பாக்கள்

## தேவாரம்

நல்ல கேள்வி ஞானசம் பந்தன்
செல்வர் சேட ருறையுந் திருப்புத்தூர்
சொல்லல் பாடல் வல்லார் தமக்கென்றும்
அல்லல் திரு மவலமடையாவே.

## திருவாசகம்

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத்திட வுடைந்து
தாழியைப் பாவுதயிர்போல் தளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழி யெப்போதுவந் தெந்நாள் வணங்குவன் வல்வினை
ஆழியப் பாவுடையாய் அடியேன் அடைக்கலமே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காகத்
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகி
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியாய் ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி.

# நன்றி.

திருமதி ஜெகதீஸ்வரி வாமதேவன் அவர்களின்
இறுதிச் சடங்குகளில் பங்குபற்றி
எமக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்
எமக்கு உறுதுணையாய் நின்று உதவிபுரிந்தவர்களுக்கும்
எமது
நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்

'ஈஸ்வர பதி'
மாவிட்டபுரம்.

V. வாமதேவனும் சுற்றத்தாரும்

புலவர் அச்சகம், சங்கானை.